# எம்பிலிபிட்டிய பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எம்பிலிபிட்டிய பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 51,349,738 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,572,111 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,815,080 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,174,578 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,274,312 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,817 | 2,730 | 3,531 |
| (ii) | வாடகை | 5,481 | 6,587 | 214 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 524 | 524 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஏனைய வருமானம் | 9,755 | 6,395 | 7,284 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 5,143,313 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,137,891 |

### 2.3.3 வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான மீன் கடைகளிலிருந்து 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 36,160 கூட்டுத்தொகையான வருமானம் சபை நிதியத்திற்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய வாராந்த சந்தையிலிருந்து 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 630,593 தொகையான நிலுவை வாடகைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

--------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்படாமையினால் மீளாய்வாண்டில் அண்ணளவாக ரூபா 68,250 தொகை வருமானத்தை சபை இழந்திருந்தது.

### 2.3.5 நீர்க்கட்டணம்

----------------------

தேருன்ணாண்சேகம நீர் உத்தேசத் திட்டத்தில் கட்டணத்தை கணிப்பீடு செய்வதற்காக மாணி வாசிப்பு பொருத்தப்படாதிருந்ததுடன் 2011 யூன் தொடக்கம் 2011 ஒக்தோபர்

வரையான காலப்பகுதியில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 382,500 ஆக இருந்த போதிலும் அக்காலத்திற்காக 60 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்தும் எவ்வித கட்டணமும் அறவிடப்படாதிருந்தமையினால் ரூபா 323,608 தொகை சபை நிதியத்தில் இழக்கப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

நிறுவனத்திற்குரிய வைப்பேரட்டின் ரோல் தனியார் நிறுவனத்தின் மூலம் பழுதுபார்க்கப்பட்டு ரூபா 306,537 தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் அப்பணம் செலுத்தப்படாமையினால் தொடுக்கப்பட்ட வழக்கிற்காக முற்பணக் கட்டணமாக ரூபா 6,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2011 நவம்பர் 22 ஆந் திகதி வரையிலும் இவ் இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை இந்த இயந்திரம் செயற்பாடற்று குறைவான பயன்பாடுடையதாகக் காணப்பட்டது.

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(I) ஆம் பிரிவின் பிரகாரம் படியின் அடிப்படையில் சேர்க்கப்படும் போது உள்ளூராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெறப்படவேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது 04 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 450,889 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் சேர்க்கப்பட்ட இரண்டு ஊழியர்கள் தொடர்பாக சேர்க்கப்பட்ட பதவிகளுக்குரிய கடமைகளும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஏ) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரமின்றி கல்விச் செயற்பாடுகளுக்காக ஆண்டிற்கு செலுத்தக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 1,000 ஆக இருந்த போதிலும் ஆங்கில மொழிப் பாடநெறிக்குரிய செயற்பாடுகளுக்காக ரூபா 13,290 தொகை அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. பாடநெறியினை நடாத்துதல், தொடர்புபடுத்துதல், நடாத்துதல் மற்றும் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை அல்லது அது தொடர்பான எவ்வித தகவல்களையும் சபையினால் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

புதிய சபைக் கட்டிடத்திற்கு திரைச் சேலைகள் வழங்குவதற்காக ரூபா 100,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்தச் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடிதக்கோவைகள் கற்பனையாகத் தயாரிக்கபட்டு பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தமையினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆவது பகுதியின் முதலாவது உபபிரிவின் பிரகாரம் அக்கற்பனைகளைச் செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடவளவ நூலகத்தைத் தயார்செய்யும் வேலை விடய இல. 1.2 இன் கீழ் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகளுக்காக ரூபா 15,875 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை 2011 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) உடவளவ சீ.டி.ஈ வீதியைப் புனரமைக்கும் வேலைக்குரிய வீதி மிகவும் குறுகிய காலத்தில் பழுதடைந்திருந்ததுடன் இரண்டாவது தடவை தார் இடுதல் குறிப்பிட்ட பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை 2011 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ள்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் வேலைகளுக்காகச் செய்யப்பட ரூபா 1,645,223 தொகையானது உபயோகமற்ற செலவினத்திற்குள்ளாகியிருந்தது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உடவளவ பிரதேச சபையின் உபஅலுவலக கடமைகளுக்காக முகாமைத்துவ உதவியாளர் ஒருவருக்கு 2011 ஆகஸ்ட் 22 தொடக்கம் 2011 நவம்பர் 22 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் சம்பளமாக ரூபா 92,932 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கடமைப்பட்டியலுக்குரியதாக மேற்கொள்ளவேண்டிய எவ்வித கடமைகளும் அலுவலகத்தில்

நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அக்கடமைகள் பள்ளேபெத்த உப அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 2010 இன் பொருள் மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட ரூபா 262,026 தொகையான பொருள் மெய்மையாய்வுச் சபையின் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்காக 2010 இன் மூன்றாவது தவணையிலிருந்து மீளாய்வாண்டின் 04 ஆவது தவணை வரையும் ரூபா 1,185,891 தொகையான தவணைப் பணத்தை உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊழியர்களின் ஆதனக் கடனுக்காக அரசினால் செலுத்தவேண்டிய வட்டியான 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆகஸ்ட் மாதம் வரை 14 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 45,385 தொகையான ஆதனக் கடன் வட்டியை மாகாண சபையிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாகாண சபை நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 15 வேலைகளுக்காக 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆகஸ்ட் மாதம் வரை 15 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் செலுத்தப்பட்ட முற்பணமாக ரூபா 839,685 தொகை கணக்காய்வுத் திகதியான 2011 திசெம்பர் 22 ஆந் திகதி வரை மாகாண சபையிலிருந்து மீளளிப்பதற்கான நடவக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) இன் பிரகாரம் ஏதாவது செயற்பாட்டிற்காகப் பெறப்பட்ட முற்பணம் அச்செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகவே தீர்க்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த கட்டுநிதி வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மேலாக தாமதப்படுத்த முடியாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாதிருந்த முற்பண மீதி ரூபா 1,544,931 ஆக இருந்தது.

(எ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்திளை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் முற்பண கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 57,087 ஆக இருந்ததுடன் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,250,343 ஆக இருந்தது.

(ஏ) கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பள்ளேபெத்த உப அலுவலகம் மற்றும் பொது நூலகம் என்பவை நடாத்தப்படுகின்ற கட்டிடங்களுக்கு அருகிலுள்ள சுற்றாடலில் முறையற்ற வகையில் குப்பைகள் குவிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அலுவலகம் மற்றும் நூலகம் என்பவற்றின் சூழலில் துர்நாற்றம், பொது மக்களின் சுகாதாரத்திற்கு இடையூறை ஏற்படுத்தும் பிரதேசத்திற்கு உட்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) வாகனப் பயன்பாடு